**செய்தி வெளியீடு எண்: 283** **நாள்: 14.05.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மக்களவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடமுறைகள் குறித்து அனைத்து மாவட்ட முன்னோடி அலுவலர்கள், தகவல் தொழில்நுட்ப பிரிவு அலுவலர்கள், மாவட்ட கணினி நிகழாளர் ஆகியோருக்கு சிறப்பு பயிற்சி**

**கூடுதல் தலைமைத் தேர்தல் அலுவலர் திரு.எம்.பாலாஜி, இ.ஆ.ப., தலைமையில் இன்று நடைபெற்றது.**

நடைபெற்ற மக்களவை தேர்தலின் வாக்கு எண்ணிக்கை நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் செய்து வருகிறது. அதன் ஒருபகுதியாக, இன்று (14.05.2019) தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட ஆட்சியர்களின் நேர்முக உதவியாளர் (தேர்தல்), தபால் வாக்குகளை மின்னணு முறையில் மாற்றும் முறையை கையாளும் முன்னோடி அலுவலர்கள், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு முன்னோடி அலுவலர்கள், மாவட்ட கணினி நிகழ்வாளர்கள் ஆகியோருக்கு இன்று கூடுதல் தலைமை தேர்தல் அலுவலர் திரு.எம்.பாலாஜி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சென்னை மாநகராட்சி அம்மா மாளிகையில் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில் இணைத் தலைமைத் தேர்தல் அலுவலர் திரு.தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., மாநகராட்சி துணை ஆணையாளர் (பணிகள்) மற்றும் மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர் திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., ஆகியோர் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். பயிற்சி முகாமில் நாட்டிற்கு வெளியிலுள்ள தூதரக அதிகாரிகள், இராணுவம், மாநிலத்துக்கு வெளியில் பணியாற்றும் உயர் அலுவலர்கள் போன்றோர் வாக்களித்த தபால் ஓட்டுக்களை மின்னணு முறையில் மாற்றுவதற்கான புதிய நடைமுறை செயல்படுத்தப்பட உள்ளது. இதை எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்து விரிவாக பயிற்சி அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி வாரியாகவும், நாடாளுமன்ற தொகுதி வாரியாகவும், வாக்கு எண்ணும்பொழுது, ஒவ்வொரு சுற்று முடிவில் சுவிதா என்ற தேர்தல் ஆணையத்தின் செயலி மூலம் வாக்கு எண்ணிக்கை விவரத்தை பதிவு செய்தல், பதிவு செய்யப்பட்ட வாக்கு விவரங்களை மாநில தலைமைத் தேர்தல் அலுவலருக்கும், இந்திய தேர்தல் ஆணையத்திற்கும், படிவம் 20யை பூர்த்தி செய்து மின்னஞ்சல் மூலம் எப்படி அனுப்ப வேண்டும் என்பதற்கான பயிற்சியும் விரிவாக வழங்கப்பட்டது.

இப்பயிற்சியில் 150க்கும் மேற்பட்ட அலுவலர்கள், முன்னோடி அலுவலர்கள், கணினி நிகழாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**